உ

பராசத்திதுணை.

மதுரை

# மீனாட்சியம்மன்

# தாலாட்டு.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதருஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதருஸ் என், சி.

1914.

பராசத்திதுணை.

# மதுரை
# மீனாட்சியம்மன் தாலாட்டு.

தென்கூடலங்கயற்கண் தெள்ளமுதைத்தாலாட்ட
மின்கோட்டுசித்தி விநாயகன்றாள் காப்பாமே.

முன்னாள்மனிதர் முனிவர்களுமீடேறத்
தென்னன்மகடாகவந்த செல்வியெனச்சொன்னாரோ.

மலையத்துவச வழுதிமா வேள்விதனிற்
சிலைநுதற்பெண்ணாகவந்த தேவியெனச்சொன்னாரோ.

பாலகப்பதிற் பாண்டியநன்னாட்டை
மாலைமுடிசூடி வாழ்விக்கவந்தவளோ.

ஈன்றுதரிக்கு மியற்கையாற் றென்மதுரைத்
தோன்றல்மகளாகியிந்த தொல்லுலகையாண்டவளோ.

அன்னியதேசத் தரசரெலாங் கப்பமிடக்
கன்னியரசாயுலகைக் காவல்புரிந்தவளோ.

தேவர்க்கரசைச் செயித்துபலநிதியுங்
காவளங்களெல்லாங் கைப்பற்றிவந்தவளோ

திக்குவிஜயஞ் செலுத்தித்திசையெழும்
ஒக்கவணங் உயர்திறை கொணர்ந்தவளோ

வெள்ளிமலைசென்று விடையோனைக்கண்டவுடன்
வெள்கித்தலைகுனிந்த மீனாம்பிகைதானே.

எந்தைசுந்தரேஸ்வரர்முன் னிசைந்தபடியேயவர்தன்
சிந்தைமகிழ்ந்துமணஞ்செய்துகொண்டபெண்ணரசோ.
தாயார்தன்மூழ்கச் சத்தசமுத்திர நதை
நாயகர்பாற்சொல்லி நாரிற்வரச்செய்தவளோ.
தாயாருடன்மூழ்கத் தந்தையைவிமானமுடன்
சேயுலகைவிட்டுத் திரும்பிவரச்செய்தவளோ.
பொன்வாலைதன்மகளாய்ப் புகழ்மாலைபூண்டினிய
சொன்மாலைமெய்யடியார் சூட்டப்புனைந்தவளோ.
இக்குவலயத்தை யிகலின்றியாள்வதற்கே
யுக்ரகுமாரனென உயர்குகனைத்தந்தவளோ
தேவர்முனிவரொடு சித்தர்வித்தியாதரரும்
ஆவலுடன்பணியு மம்மையிவள்தானே.
குரகதஆனனத்தாள் கூடப்பிறந்தசெழும்
மரகதவல்லியென வந்துதித்தவாரமுதோ.
மன்னுஞ்சராசரங்கள் வரம்பின்றிப்பெற்றளித்தும்
எந்நாளுங்கன்னியென விருக்குமிளங்கொடியோ
துடியாரிடையாளோ சுகத்தின்மொழியாளோ
அடியாள்வினையகற்று மருள்நிறைந்தகண்ணாளோ
நாமகளைத்தேவர் நாட்டுக்குயர்மகளை
மாமகளையேவல்கொளும் வழுதிதிருமகளோ.
போந்தவுயிர்க்கெல்லாந்தாம்பொதுவென்பதையுணர்த்த
சாந்நாரைக்கு முத்திதந்தோனைசார்ந்தவளோ
சருவவுயிரைந்தெழுத்தை சாற்றுவதுநீதியென்றோ
கருக்குருவிக்குபதேசங் கற்பிக்கச்சொன்னவளோ.

எல்லாவுயிர்க்குந்தா யென்றுமறைவோலமிட
நல்லாள்பொன்மாலை நன்மகளாய்வந்தவளோ.
வந்தவளோகாழிநகர் வள்ளலுக்குஞானமுதந்
தந்தவளோவேதத் தலையின்னடிப்பவளோ.
பச்சைக்கிளியோ படர்ந்தசுடரொளியோ
நச்சரவம்பூண்டபர ஞரிடத்தமர்ந்தவளோ.
கண்ணின்மணியோ கற்பகத்தின்செந்தேனோ
வண்ணக்குயிலோ மாதங்கள்மாதரசோ.
பொன்னிவளநாடன் புகழ்மலையநாட்டரசன்
இன்னும்பலபோகமொழ விருந்தரசுசெய்தவளோ.
கல்லானைதானருந்தக் கரும்பளித்தவல்லாந்தன்
வல்லசித்தர்தன்னை மணம்புணர்ந்துகொண்டவளோ.
அந்தணர்கள்போற்று மாரணத்தின்மெய்ப்பொருளோ
பந்தவினையகற்றும் பரமதயாநிதியோ
பொய்யரும்மெய்யன்ப ரகம்போந்துகுடிகொண்டவளஞ்
செய்சூழ்மதுரைநகர் சிறக்கவந்தபேரரசோ.
ஆளியின்வாகனமீ தமர்ந்தேவருபவளோ
காளிதாசர்க்கருளு கருணைச்செழுங்கடலோ.
இப்புவியில்மீனாட்சி யின்பேரில்தாலாட்டை
முப்பதுங்கற்றவர்கள் மூவுலகையாள்வாரே.

மீனாட்சியம்மன் தாலாட்டு

முற்றிற்று.

---

பராசக்திதுணை.

# மதுரை மீனாட்சியம்மன்

# ஊஞ்சற்பாட்டு.

பசும்பொன்னின்குவியல்களை யுலகிற்காய்ச்சிப்
பக்குவக்கட்டளை யிலிட்டுச்செங்கலாக்கித்
தசும்புநிகர் முத்தினத்தைச் சுண்ணஞ்செய்து
சமைத்ததொருவிசித்ரப்பொன் மண்டபத்தில்
விசும்பிலுளவிஸ்வகர்மா நிர்மித்திட்ட
விளங்குநவமணியூசல் மிசைவிண்ணோரும்
வசம்புரியொண்ணுவுமையே யாடீரூசல்
மதுரைமீனாட்சியம்மை யாடீரூசல். (க)

வேலைசெய்த வயிரமணித் தூண்களுட்டி
விலைபெற்ற மாணிக்கச் சட்டமாட்டிக்
கோலமரகதப்பலகை கொண்டுபூட்டிக்
குடங்கைநவமணிகளினுல் வயங்கத்தீட்டிச்
சாலவேபருமுத்தின் சரங்கள்சூட்டி
தமனியச்சங்கிலி வடந்தொட்டறமாதாட்ட
மாலைமனோன்மணி யெந்தாயாடீரூசல்
மதுரைமீனாட்சியம்மை யாடீரூசல். (உ)

விண்ணுலகமாதர்வந்து புட்பஞ்சூட்ட
விஞ்சையர்கண் லடமாதர் வீணைமீட்டக்
கண்ணிபுனைபுலோமிசை காளாஞ்சிரீட்டக்
காசினியின்மாதர்பல விநோதங்காட்டப்
பண்ணரிய பலவாத்ய கோஷ்டமீட்டப்
பாமாதும்பூமாதும் வடங்தொட்டாட்ட
வண்ணமரகதவல்லி யாடீரூசல்
மதுரைமீனாட்சியம்மை யாடீரூசல். (ரு)

அலைகடல்சூழ்புவியரசர் தம்மின்மூன்றெண்
ணரசருக்குள்சிறந்துசிவ தொண்டுபூண்டு
கலைமதியின்மரபில்வந்த வேந்தருக்குள்
கலைபயின்றுமுடிபுனைந்து உலகின்மீது
கலியிருளைப்பகையிருளைக் களைந்துநாளும்
கற்பகக்காவிந்திரனே யுவமைகூறும்
மலையரசன்றவமணித் தாயாடீரூசல்
மதுரைமீனாட்சியம்மை யாடீரூசல். (சா)

திங்களிடமுதித்ததோ ருயர்ந்தமுத்துஞ்
சிந்துரத்தினிடத்துதித்த ஆணிமுத்தும்
நங்கையரகண்கண்டத்தி லுதித்தமுத்தும்
நாகத்தினிடமுதிற்து வயங்குமுத்துஞ்
செங்கரும்பினிடமுதித்துச் சிறந்தமுத்துஞ்
சேர்ந்தவிடம் லமதிபோற் றுலங்கமரர்பில்

மங்களஞ்சேர் பெண்ணரசியாடீரூசல்
மதுரைமீனாட்சியம்மை யாடீரூசல். (ரு)

பட்டிசைந்தயிடைதனி லொட்யாணமின்ன
பானுநிகர் வயிரமூக்குத்திமின்ன
மட்டில்லாவிலையுயர்ந்த பணிகள்துன்ன
மாணிக்கவோலை காதணிகள்சொர்னக்
கட்டிசைந்த கைவளையுங் கொலுசுமோங்கக்
கண்டவர்கள்துயர்பாசக் கட்டுநீங்க
மட்டுவார் குழலுமையே யாடீரூசல்
மதுரைமீனாட்சியம்மை யாடீரூசல். (சு)

பாரதிநல்யாழ்மீட்டிப் பாடத்தேவப்
பரத்தையர்கால்வரும் பரதப்படியேயாட
தீரமுடன்மூவாசை துறந்தோர்வந்து
திருக்கோலங்கண் டானந்தங்கொண்டாட
வாரணிந்தகுவிமுலைக்காந் தருவமாதர்
வணங்கிநின்றேவல்செய்ய வையம்ஞான
வாரிதியேமறைப்பொருளே யாடீரூசல்
மதுரைமீனாட்சியம்மை யாடீரூசல். (எ)

மூவுலகததுயிரனைத்தும் ஈன்றெந்நாளும்
முற்றுதகுயர்ச்சிறபெண் ணுக்குகூடற்
காவலன்றன்மகளாகி ராஜநீதி
காட்டிடவேமுடிபுனைந்து கடுநீகைவேணித்

தேவனைகன்மணம்புரிந்தே யில்லறத்தின்
செயலிதுவென்றுலகத்தோர் தேரச்செய்த
மாவுலககற்றாயே யாடீரூசல்
மதுரைமீனாட்சியம்மை யாடீரூசல். (அ)

வாசமலர்கலைவமண மெங்கும்வீச
வண்ணலட்சங்கன்னியர்கள் மருங்கேசூழ
ஆசின்மறைமுடிமேவுஞ் சுயம்பிரகாச
வரும்பொருளே யெனவேதன்மாலோர்பேச
பாசயமனெப்பொழுதுங் கண்டுகூச
பழவடியாருள மலரிற் பதியும்நேச
மாசில்லாவருட்கடலே யாடீரூசல்
மதுரைமீனாட்சியம்மை யாடீரூசல். (௯)

வேதாகமங்களைகள் விண்ணும்வாழ்க
விபுதர்முனிகணங்களுடன் விரிஞ்சன்வாழ்க
நாதாந்தங்கடந்துநின்ற சோதிவாழ்க
நானிலஞ்சேர்சிவனடியார் கூட்டம்வாழ்க
ஆதாரம்நீயென்று பாதம்போற்றும்
அடியார்க்குக்கிருபைசெய்ய வரனேயென்று
வாதாம்பசுங்கிளியே யாடீரூசல்
மதுரைமீனாட்சியம்மை யாடீரூசல். (௰)

மதுரைமீனாட்சியம்மன் ஊஞ்சற்பாட்டு

முற்றிற்று.